24th January 1972]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மற்ற மருத்துவ மனைகளில் இன்-பேஷன்ட் என்று சொல்லுவதற்கும், காச நோய் மருத்துவ மனையில் இன்-பேஷன்ட் என்று சொல்லுவதற்கும் ஒரு வேறுபாடு உண்டு. மற்ற மருத்துவ மனைகளில் 3 அல்லது 7 நாட்கள் தங்கிக்கூட சிகிச்சை பெற்றுத் திரும்புகிறவர்கள் பலர் உண்டு. ஆனால் காச நோய் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறுகிறவர்கள் ஏறத்தாழ 3 முதல் 6 மாதம் வரையில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. புதிய நோயாளிகளைக் காப்பாற்ற, பழைய நோயாளிகளைக் கைவிட முடியாத நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அழைத்துக்கொள்ள முடியாத அளவில் இட நெருக்கடியான நிலைமை இருக்கிறது. சேர்த்துக்கொள்ளப்பட்ட நோயாளிகளைக் காப்பாற்றுவதில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த மருத்துவ மனை தோன்றிய காலத்திலிருந்து இன்று வரையில் சூப்பரின்டென்டாக இருந்து வருபவர் அந்த மனையில் பணியாற்றும் ஊழியர்களை மதமாற்றம் செய்வதில் அக்கறை காட்டுகிறார் என்ற புகார் ஏதும் அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழகத்தில் உள்ள எந்த ஒரு மருத்துவ மனையிலும் இப்படிக் கட்டாய மதமாற்றம் செய்வதாகப் புகார் வரவில்லை. நோய் உடையவர்கள், துன்பப்படுகிறவர்களிடத்தில் மதச் சார்புடையவர்கள் ஆறுதல் அளிக்கும் பேச்சுக்களைப் பேசலாம். ஆனால் மதமாற்றம் செய்கிறார்கள் என்று சொல்லுவதற்கு எவ்விதமான சான்றும் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, காச நோயாளிகளைப் பதிவு செய்கிறபோது, சிலர் முற்றிய நிலைமையில் நோயுற்றவர்களாக இருக்கிறார்கள், நோயின் தரத்தைப் பிரிக்காமல், எல்லோரையும் ஒரே மாதிரியாகக் கருதி கடிதங்கள் அனுப்புகிறார்கள். எனவே நோய் முற்றியிருந்தால், அவர்களுக்கு உடனடியாகக் கடிதம் எழுதவும், நோய் சாதாரணமாக இருந்தால், அவர்களுக்குச் சிறிது காலம் கடந்து கடிதம் எழுதுவதும் போன்ற முறையை அரசு அமுலுக்குக் கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லிய கருத்து அந்த மருத்துவ மனைக்குத் தெரிவிக்கப்படும். கூடியவரையில் அந்த ஆலோசனையை நிறைவேற்ற முயற்சிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Apprenticeship Training Scheme

*12 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:—

(a) the number of Appprentices who have passed out in this State under the Apprenticeship Training Scheme during 1970–71; and

(b) (i) Trades and (ii) Industries in which they have been trained?

[24th January 1972

வேலை பயில்வோர் திட்டம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வேலை பயில்வோர் திட்டத்தின்கீழ் 1970-71-ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் தேறிய தொழில் பயில்வோரின் எண்ணிக்கை என்ன?

(இ) அவர்கள் பயிற்சி பெற்ற (1) பணிகள் (2) தொழில்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: வேலைக்குப் பயிற்சி பெற்றவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்களா என்ற விவரம் அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பயிற்சி மட்டும்தான் கொடுக்கிறோம். பின்னால் அதை வைத்துத் தொழிற்சாலைகளில் சேர வேண்டும்.

Gudalur Industrial Co-operative Tea Factory Limited

*13 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether (i) Machinery and (ii) Electrical equipment were purchased for the Gudalur Industrial Co-operative Tea Factory Limited in the Nilgiris district during 1970-71 and 1971-72; and

(*b*) if so, the details thereof?

கூடலூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1970-71-72-ல் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைக்கு (1) இயந்திரங்களும் (2) மின்சாரக் கருவிகளும் விலைக்கு வாங்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இதற்கான பங்குகள் மக்களிடமிருந்து பெற்றும் இன்னும் செயல்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா? ஏன் அது செயல்படாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீலகிரி மாவட்டத்தில் எட்டு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன, லாபத்தில் நடைபெறுகின்றன. **இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் சில இயந்திரங்கள் அதற்கு வாங்க வேண்டுமென்று** முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு டெண்டர்கள் 'கால் ஃபார்' செய்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் முடிவெடுப்பார்கள்.

@ Printed as Appendix III on pages 64–70.